**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 180/2019**

பெயர் : பெரோஸ் தீன் P.W.1.

த/பெ. : ஜபுருதீன்

தேதி : 07.08.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை:** –

1. எனது தந்தை பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் எனது பாட்டனார் சொத்துக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையிலிருந்து கிரயம் பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. எனது தாயார் நூர்ஜகானின் சீதன நகைகளை விற்றும் நஞ்சை, புஞ்சை நிலங்களை விற்றும் ஏ அட்டவனை சொத்து வாங்கபட்டது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை. நான்மேற்கூறிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. ஏ அட்டவனை சொத்தை எனது தந்தை வாங்கிய கிரயமானது எனது பாட்டனாரின் சொத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து கிடைக்கப்பெற்றது என்றும், எனது தயாரின் சீதன சொத்துக்களையும், நகைகளையும் விற்று கிரயம் வாங்கப்பட்டது என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை. நான் எனது வழக்குரையில் கூறியுள்ளபடி ஏ அட்டவனை சொத்துகள் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஜபருதீன் என்பவரின் சொத்தை பொறுத்து அவருக்கு தனித்துவ உரிமை இருப்பதால் கடந்த 12.12.2010 தேதியில் அவர் எழுதிவைத்த தான செட்டில் மெண்ட் ஆவணம் செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் நான் வழக்குரையில் கோரியுள்ள 1வது பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

3. நான் மயிலாடுதுறை விரைவு நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு எனது தந்தைக்கு எதிராக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்திருந்தபோதே மேற்படி 12.12.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் எனக்கு நினைவில் இல்லை. சீர்காழி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் 01.12.2012 தேதியில் நான் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த போதே மேற்படி செட்டில் மெண்ட் ஆவணத்தை பற்றி

எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஏ அட்டவனை சொத்தானது 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதா அல்லது வேறு யாருக்காவது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. 1ம் பிரதிவாதிக்கு இறந்துபோன ஜபருதீன் ஏ அட்டவணை சொத்தை உரிமை மாற்றம் செய்து ஒப்படைத்த நிலையில் 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட பொருளாதார நலிவு காரணமாகவும் கடன் பிரச்சனையினாலும் மேற்கண்ட சொத்தை விற்பனை செய்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் மேற்படி சொத்தின் அனுபவம் என்னிடம் உள்ளது. மேற்கண்ட ஏ அட்டவனை சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்ற நபரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் நான் கோரிய 1,2 பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்கண்ட விபரங்களை எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அந்த ஆவணத்தை நீக்கரவு செய்யக்கோரி நான் நீதிமன்றத்தில் 3 ஆண்டுகளுக்குள் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில் இல்லை. 1ம் பிரதிவாதி வேறு நபருக்கு கிரயம் எழுதிக்கொடுத்த ஆவணத்தை ரத்து செய்யக்கோரி நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யாததால் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

5. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் பி அட்டவனை சொத்தில் கடந்த 30.12.2011 அன்று தான செட்டில் மெண்ட் பத்திரம் ஏற்பட்டு அதன் அனுபவ சுவாதீனத்தை எனது தந்தை எடுத்துக்கொண்டார் என நான் கூறியுள்ளேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது தந்தை இறந்துவிட்டார் என எனது வழக்குரையில் நான் கூறவில்லை என்றால் நினைவில் இல்லை. பி அட்டவணை சொத்தை பொறுத்து ஜபுருதீன் அவர்கள் எந்த ஒரு ஏற்பாடும் செய்யாத நிலையில் அந்த சொத்தில் ஜபுருதீன் அவர்களின் வாரிசுகளான 1ம் பிரதிவாதி உள்ளிட்ட அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. முகமதிய சட்டப்படி 1ம் பிரதிவாதிக்கும் வாரிசு உரிமை உண்டு என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி கூட்டுரிமையாளர் என்பதால் அவருக்கு எதிராக நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ள 3வது பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.